මහජන බැංකුව | மக்கள் வங்கி

PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள காகித றீல் வழங்குவது தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உற்பத்தியாளர்களிடமிருந்து, வழங்குநர்களிடமிருந்து மற்றும் அவர்களின் உள்ளூர் முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை விபரங்கள் கோரப்படுகின்றது.

| கேள்விப்பத்திர இலக்கம் | பொருள் பற்றிய விபரம் | அலகு அளவு | விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியின் பெறுமதி (ரூ) | கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இறுதி திகதியும் நேரமும் | கேள்விப்பத்திரம் மூடப்படும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| P-079/2023 | **60 GSM** இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை பேங்க் காகித றீல்<br>9.5” அகலம்<br>17” அகலம்<br>15” அகலம் | 10 மெட்றிக் தொன் ± 10%<br>05 மெட்றிக் தொன் ± 10%<br>90 மெட்றிக் தொன் ± 10% | 500,000/- | 2023.10.10ஆம் திகதி பி.ப.2.00 மணி | 2023.10.11ஆம் திகதி பி.ப.2.00 மணி |
| P-080/2023 | 55-56 GSM NCR இறக்குமதி செய்யப்பட்ட காகித றீல்<br>15” அகலம்<br>15” அகலம் | 15 மெட்றிக் தொன் ± 10%<br>15 மெட்றிக் தொன் ± 10% | 300,000/- | | |

**<u>ஏனைய நிபந்தனைகள்:-</u>**

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை 2023.09.20ஆம் திகதி முதல் 2023.10.10ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், ஒரு கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்காக ரூ.1,500/- மீளச் செலுத்தப்படாத கேள்விப்பத்திர வைப்புத் தொகையொன்றைச் செலுத்த வேண்டும். கேள்விப்பத்திர விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்காக குறித்த நிறுவனத்தின் கோரிக்கை கடிதமொன்றையும் இத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஒழுங்காகத் தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களுடன் ஒவ்வொரு பொருளுக்கும் மேலே குறிப்பிடப்பட்ட விலைகூறல் பெறுமதிக்கு குறையாமல் ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து (மக்கள் வங்கியைத் தவிர்த்து) பெற்றுக் கொண்ட வங்கி பிணைப்பொறுப்பு முறியொன்றை அல்லது முறியொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் அது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருக்க வேண்டும். இதற்காக வங்கி கொடுப்பனவு கட்டளையொன்றை அல்லது வங்கி வரைவைச் சமர்ப்பிக்க முடியும். (கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குச் செல்லுபடியானது), தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3. 2023.10.11ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு கேள்விப்பத்திரம் திறக்கப்படுவதோடு, அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் முத்திரையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை மக்கள் வங்கி, வழங்கல் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். இன்றேல் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அந் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

4. அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் மற்றும் எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியை மாத்திரம் ஏற்றுக்கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு.

5. இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதம முகாமையாளர் (வழங்கல்), மக்கள் வங்கி, வழங்கல் திணைக்களத்திலிருந்து பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதம முகாமையாளர் (வழங்கல்)**
**மக்கள் வங்கி,**
**வழங்கல் திணைக்களம்,**
**30/101, கியு வீதி, கொழும்பு 02.**

**தொலைபேசி இலக்கம் - 2439577, 2439578**
**தொலைநகல் இலக்கம் - 2439576**
**இணையத்தளம் - www.peoplesbank.lk**
**மின்னஞ்சல் - supplies@peoplesbank.lk**